**கவிதைப் போட்டி -2 (முதல் பரிசு)**

**நாளைய தலைமுறையின் இன்றைய கனவு (16)**

இளைஞர் உலகம் இன்பம்
இல்லாத உலகம் துன்பம்
கலையும் அறிவும் யாராலே?
காளையர் கடுமழைப் பாலே!

விளையும் பயிரது தெரியும்
முளையி லேயே புரியும்1
நிலையில் பொருளும் கோளும்
நெடுமை இல்லா வாழ்வும்
இளையோர் முயன்றால் நீளும்1
இன்பமே உலகை ஆளும்
அலைபோல ஓயா துழைக்கும்
ஆற்றல் உள்ளவர் இளைஞர்!

சிலைபோல் நின்றிருந்தாலும்
சிந்தனை யோடே நிற்பார்!
மலைபோல் மாண்பினை வளர்ப்பார்
மானுட மகத்துவம் காண்பார்!

புதிய வரலாறு படைத்திடவே
புனிதர் தலைமுறை இங்குண்டு!
உதய மாகும் வரலாற்றில்
ஊனக்கும் எனக்கும் பங்குண்டு!